## புதுக்கோட்டை மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை
(13-07-2016 – 17-07-2016)

**இணைந்து வழங்குபவர்கள்:** இந்திய வானிலை துறை, பிராந்திய வானிலை மையம் சென்னை, ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மா.ச.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

தேதி: 12-07-2016

### கடந்த கால வானிலை 08-07-2016 முதல் 11-07-2016 வரை

| காரணிகள் | கடந்த கால வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 0.1 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 36-38 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 27-29 |
| மேக மூட்டம் | 6 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 39-56 |
| காற்றின் வேகம்(கி.மீ / மணி ) | 26-27 |

### எதிர்பார்க்கப்படும் வானிலை 17-07-2016 - 8.30 மணி நேரம் வரை

| காரணிகள் | 13.07.16 | 14.07.16 | 15.07.16 | 16.07.16 | 17.07.16 |
|---|---|---|---|---|---|
| மழை (மி.மீ) | 0 | 0 | 1 | 3 | 12 |
| அதிக பட்ச வெப்பநிலை(செ) | 37 | 37 | 36 | 36 | 34 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 28 | 28 | 27 | 27 | 25 |
| மேக மூட்டம் | 5 | 5 | 6 | 6 | 7 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 59 | 59 | 65 | 70 | 85 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 44 | 44 | 50 | 55 | 70 |
| காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 26 | 26 | 27 | 27 | 27 |
| காற்றின் திசை | மேற்கு வடமேற்கு | மேற்கு வடமேற்கு | மேற்கு வடமேற்கு | மேற்கு வடமேற்கு | மேற்கு வடமேற்கு |

**குறுஞ்செய்தி :**

- ஜுலை 15-ம் தேதியிலிருந்து 17-ம் தேதி வரை இலேசான முதல் மிதமான மழை சில இடங்களில் எதிர்பார்க்கப்படுகிறது.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**பயிர்: நெல், கரும்பு**

- நெல் நடவு வயலில் ஒரு ஏக்கருக்கு அடியரமாக 200 கிலோ ஜிப்சம் இடவேண்டும். மேலும் மணிச்சத்திற்கு 125 கிலோ சூப்பர் பாஸ்பேட், அடியுரமாக இடவேண்டும். தழைச்சத்து மிகவும் குறைவாக இருக்கும் பட்சத்தில் ஒரு ஏக்கருக்கு 35 கிலோ யூரியா இடவேண்டும்.
- 150 நாட்கள் வயதுடைய கரும்புக்கு தோகை உரிப்பதன் மூலம் முன் பருவ நடப்பட்ட கரும்பில் துளைப்பான் பூச்சியின் தாக்கத்தை குறைக்க வேண்டும்.
- பூக்கும் மற்றும் காய்க்கும் பருவத்தில் உள்ள காய்கறி பயிர்களுக்கு வெப்பநிலை அதிகமாக காணப்படுவதால் நுண்ணூட்டத்தை தண்ணீர் வழி மற்றும் இலை வழியாக தெளிக்கலாம்.
- விவசாயிகள் தங்களுடைய கொட்டகை மற்றும் அதன் சுற்றுப்புறங்களைத் தண்ணீர் தேங்காமல் உலர்ந்து வைப்பதால் கால்நடைகளுக்கு ஏற்படும் குளம்பு அழுகல் நோய் மற்றும் ஈ மற்றும் கொசுக்களின் பெருக்கத்தை தடுக்கலாம்.